# தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள் ஒரு பார்வை

**ச. விக்ரம்[1] & முனைவர் செ. மார்கண்டன்[2]**
[1]முழு நேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை, தமிழ் நாடு
[2]நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் பல்லாவரம், சென்னை, தமிழ் நாடு

Open Access

Manuscript ID: BIJ-2025-J-101

Subject: Tamil

Received : 09.06.2025
Accepted : 09.07.2025
Published : 28.07.2025

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

மொழியானது மனிதன் வாழக்கூடிய இடத்தையும், சூழ்நிலையையும் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதனும் பேசக்கூடிய மொழிகளில் தென் மாவட்டங்களின் வாயிலாக சொற்கள் மாற்றம் அடைந்து பொருளைத் தருகின்றன. அவ்வாறான சொற்கள் எம்முறையில் வட்டார வழக்குச் சொற்களாக மாற்றம் அடைந்து மக்களிடையே புழக்கத்தில் இருக்கின்றன என்பதனை பற்றி கீழ்க்காணும் கட்டுரையின் மூலம் விரிவாக காண்போம்.

**முக்கியச் சொற்கள்: வந்தாங்கெ, இன்டார்டு, முடுக்குது, கஷண்டி, பைதா, வெள் உவன்**

## வட்டார வழக்குச் சொல்லின் விதி

பெரும்பாலான வட்டார வழக்குகளில் “மின்தொடர்பு விதி” செயல்படுகிறது. மின்சாரம் இருபுள்ளிகள் நடுவே இருக்கும் குறைந்த தூரத்தையே தேர்வு செய்யும். அதுபோல, சொற்களின் முதல் – கடைசி என இருபுள்ளிகள் நடுவே உச்சரிப்பு அதிவேகமாக ஓடிச் செல்வதை வட்டார வழக்கின் ஒரு விதி எனலாம்.

உதாரணமாக, “நாராயண அய்யர்” என்ற சொல் “நார்ணயர்” என்று மாற்றம் அடைகிறது.

## தமிழ்நாட்டில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள்

ஒவ்வொரு மனிதனும் பேசக்கூடிய மொழிகளில் இருந்து பல கிளை மொழிகள் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றுகின்ற கிளை மொழிகளை வட்டார மொழி என்று அழைக்கப்படுகிறது.

சான்றாக, சங்க காலத்தில் வட்டார வழக்குச் சொற்கள் இருந்துள்ளன என்பதை, பன்றி நாடு, குட்ட நாடு, குட நாடு, அருவா நாடு” என “செந்தமிழ்சேர் பன்னிருநிலத்தை” வட்டார அடிப்படையில் தான் பிரித்திருக்க வேண்டும். ஏனெனில் பின்னர் தோன்றிய உரையாசிரியர்கள், ஏதேனும் ஒரு உயிரினத்தையோ அல்லது ஒரு பொருளையோ குறிக்கும் பெயரினை நாட்டினுக்கு நாடு வேறுபடுகிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இன்று தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் பேசக்கூடிய வட்டார வழக்குச் சொற்கள், மக்களிடம் சாதி வழக்குச் சொற்கள், சமய வழக்குச் சொற்கள்,